செ.வெ.எண்.19 நாள்.07.10.2017.

**திருநெல்வேலி எப்எக்ஸ் பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து நடத்திய வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் துறையின் சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பணி நியமன கடித்தினை வழங்கினார்.**

-------

திருநெல்வேலி எப்எக்ஸ் பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து நடத்திய வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் துறையின் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் இன்று (07.10.2017) நடைபெற்றது. இம்முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன கடிதம் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 515 நபர்களுக்கு பணி நியமன கடிதங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது –

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழக அரசின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்துவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே திட்டமிடப்பட்டு, இன்று சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் ஆண்டிற்கு மூன்று முறை இது போன்று மெகா வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுவதன் நோக்கம் அனைவருக்கும் அரசு பணி வழங்க இயலாத நிலை உள்ளது. குறைவான அரசு பணி உள்ளது. தனியார் நிறுவனங்களில் தான் அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் உள்ளது. வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து இது போன்ற முகாம்கள் நடத்தப்படுகிறது. இம்முகாமில் மாற்றுத்திறனாளிக்கென தனி அரங்கில் நேர்முக தேர்வு நடத்தப்பட்டது. இம்முகாமில் 93 நிறுவனங்கள் பங்கேற்றுள்ளது. இதில் 9 நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகளை மட்டும் தேர்வு செய்ய வந்திருந்தனர். இச் சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாமில் 7300 நபர்கள் வந்து பதிவு செய்துள்ளனர். இதுவரை 2164 நபர்களுக்கு பணி நியமன கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் 515 நபர்களுக்கு பணி நியமன கடிதம் வழங்கப்படுகிறது. 24 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பினை அனைவரும் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு வேலை அனுபவமும், திறன் மேன்மையடையும். சில நிறுவனங்கள் தங்களுக்கு தேவைப்படும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து தேர்வு செய்வார்கள். ஐ.ஏ.எஸ் பணியில் கூட இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி உள்ளது. எனவே திறன் மேம்பாட்டு பயிற்சியை அவசியம் மேற்கொள்ள வேண்டும். இன்று பணி நியமனம் பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகளையும். இங்கு வருகை தந்த நிறுவனங்களுக்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். மேலும் இளைஞர்கள் சுயமாக தொழில் தொடங்கி மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் நீட்ஸ் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் உள்ளது. இது குறித்தும் இங்கு அரசுத்துறை அரங்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து இளைஞர்களும் வேலைவாய்பினை பெற வேண்டும். மேலும் பல்வேறு நிறுவனங்களை தொடங்கி வேலைவாய்ப்பினை உருவாக்கிட வேண்டும். என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் திட்ட திட்ட அலுவலர் திருமதி.ஹெட்சி லீனா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.நாகேந்திரன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ஆண்டனி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் திருமதி.ஜெகதாம்பிகை, திருமதி.லூர்திமேரி, திரு.முருகன், திரு.அருண் பிரசாத், திரு.ராமர், திருமதி.அனிதா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.